# ST PETER FOURIER

## December 9



## *புனித பீற்றர் (Fourier) (1563 – 1640)*

இவர் 15-ஆம் வயதில் கல்வி கற்க கல்லூரிக்குச் சென்றார். சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். பிரான்ஸ் நாட்டில் கல்வினிஸ்ட் பதிதர்கள் பெரும் தீமை செய்து வந்தார்கள். மத்தான்குர் என்னும் நகர் மிக மிக பாதிக்கப்பட்டிருந்தது. மக்கள் கெட்டவர்கள், ஏழைகள், இந்தப் பட்டணத்தில் உழைக்க பீற்றர் தீர்மானித்து தமது தூய வாழ்வாலும் அன்புப் போதனைகளாலும் உருக்கமான செபங்களாலும் அந்த ஊர் மக்களை முற்றிலும் மனந்திருப்பிவிட்டார். மக்களின் வழக்குகளை விசாரிக்க சில அறிவாளிகளை நியமித்தும், அவர்களுக்கு பண உதவி செய்ய ஏற்பாடுகளும் செய்தார். ஏழைச் சிறுமிகளுக்கு இலவச பள்ளிக்கூடம் ஒன்றை 1598-ஆம் ஆண்டு தொடங்கி கன்னியர்களை கல்வி கற்பிக்கச் செய்தார். பங்கில் உள்ள ஆண்களுக்காக புனித செபஸ்தியார் பெயரால் ஒரு சபையும் பெண்களுக்கு அமல உற்பவ மாதா சபையும் தொடங்கப்பட்டது. சிறுவர்களுக்காக கிறிஸ்தவ புண்ணியங்கள் பற்றி ஒரு நூல் எழுதினார். அதை ஞாயிறுதோறும் சிறுவர்கள் சத்தமாய்ப் படிப்பார்கள்.

1621-ஆம் ஆண்டு ஒரு சந்நியாச சபையை சீர்திருத்தும்படி ஓர் ஆயர் இவரை அழைத்தார். பதிதர்களில் அநேகரை இவர் மனந்திருப்பினார். ஊரில் இருந்த பிரிவினைச் சபையினர் அனைவரையும் ஆறு மாதங்களில் மனந்திருப்பினார்.

**சிந்தனை:**

தூய வாழ்வாலும், அன்புப் போதனைகளாலும் உருக்கமான செபங்களாலும் ஊர் மக்களை முற்றிலும் இவர் மனந்திருப்பிவிட்டார். நானும் எனது வாழ்விலும் இவ்வாறு செய்கிறேனா?

**செபம்:**

ஆண்டவரே, தூய வாழ்வு என்னும் வரத்தை எல்லா மக்களுக்கும் தாரும்.